7th November 1957]

Sri N. K. PALANISAMI : பெண் போலீஸ் படையினருக்கு துப்பாக்கிப் பயிற்சி அளிக்கப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஜான்சி ராணி பிறந்த நாட்டில் பிறந்தவர்கள் அல்லவா அவர்கள். அவர்களுக்குத் துப்பாக்கி பயிற்சிகூட அளிக்கப்படும்.

Sri K. VINAYAKAM : What is the extraneous object of recruiting women to Police Service? Does it mean that the men Police has failed to do the job which the women might do properly?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் முதலில் கொடுத்த பதிலை கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். படித்த அங்கத்தினராயிருந்தும் கெட்டிக்காரராயிருந்தும் அங்கத்தினர் இதை சரியாக புரிந்துக் கொள்ளவில்லை. நான் பெண்களை கவனிப்பதற்காக பெண்கள் போலீஸ் நியமிக்கப்படுவதைப்பற்றி முன்பே விவரித்துச் சொன்னேன்.

State Publishing House.

* 102 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to constitute a State Publishing House for publishing cheap books in Tamil?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Sri N. K. PALANISAMI : ஏற்கெனவே நமது ராஜ்யத்தில் தமிழில் ஆட்சி நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்ற இந்த நேரத்திலே, உத்தியோகப்பற்றற்ற ஒரு கமிட்டியைப் போட்டு திருவள்ளுவர் எழுதிய திருக்குறளையும் பாரதியார் எழுதிய புஸ்தகங்களையும் குறைந்த விலையில் வெளியிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த விஷயத்தில் தனிப்பட்டவர்கள் பிரசுரிப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதில் தலையிடவேண்டிய அவசியம் இல்லை.

Incidence of cholera.

* 103 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR** : Will the Hon. the Minister for Revenue be pleased to state the incidence of cholera in the State and in the City so far?

The Hon. Sri M. A. MANICKAVELU : During this year up to 5th October 1957, there have been 1,487 attacks and 285 deaths due to cholera in the City of Madras and 2,361 attacks and 1,197 deaths in the State excluding the City.

Sri K. SATTANATHA KARAYALAR : சென்ற ஆண்டில் இதே காலத்தில் எவ்வளவு காலரா கேசுகள் வந்தது என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : குறிப்பாக இந்த கேள்வி முன்னமே கேட்கப்படவில்லை. ஆகவே புள்ளிவிவரங்கள் கொடுப்பதற்கு அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware of the insanitary conditions prevailing in the Infectious Diseases Hospital, Tondiarpet?